TNTT070123042019

Presented on : 04-10-2019
Registered on : 10-10-2019
Decided on : 25-06-2026
Duration : 6 years, 8 months, 21 days

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2
முன்னிலை – திருமதி.M.மணிமேகலா, M.A., M.L.,
நீதித்துறை நடுவர் எண்.2 கோவில்பட்டி.
2026–ம் ஆண்டு ஜுன் மாதம் **25** ம் நாள் வியாழட்கிழமை
ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 243/2019

| | |
|---|---|
| குற்றமுறையீட்டாளர் | தமிழ்நாடு மாநில அரசு சார்பில்<br>காவல் உதவி ஆய்வாளர்<br>கோவில்பட்டிமேற்கு காவல் நிலையம்<br>குற்ற எண். 283/19 |
| அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் | திரு. காளிதாஸ் |
| எதிரி | ராஜு(எ)ராஜ், (வயது 30 /26)<br>த/பெ. பரமசிவம்,<br>செண்பகவல்லி நகர்,<br>தற்போதைய முகவரி,<br>இந்திரா நகர்,<br>கோவில்பட்டி,<br>தூத்துக்குடி மாவட்டம். |
| எதிரி தரப்பில் வழக்கறிஞர் | திரு. வளன் வினோ சிங் |

இவ்வழக்கானது 04.10.2019–ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் ஆண்டுபட்டிகை வழக்கு எண். 243/19 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு இறுதி விசாரணைக்கு வந்த போது அரசுத் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர்

அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. வளன் வினோ சிங் அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் ஆழ்ந்த பரிசீலனையில் இருந்து வந்து இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு, சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்

| Sl. No. | Name of the Police Station and crime Number of the offence | Description of the Accused | | | | | Date of | | | | | | | | | Explanation of delay |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Name | Father's name | Occupation | Residence | Age | Occurrence | Complaint | Apprehension | Release on bail | Commitment | Commitment of Trial | Closure of Trial | Sentence or order | Service of copy judgment or finding on accused | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) |
| 1 | Kovilpatti West P.S, Cr.No. 119/25 U/s. 294(b), 387, 506(2) IPC | Raju@ Raj | Paramasivam | Driver | Indira Nagar | 30 | 11.06.2019 | 11.06.2019 | 18.12.2019 | 21.06.2019 | NA | 18.02.2026 | 17.06.2026 | 25.06.2026 | - | N.A |

<u>**தீர்ப்புரை**</u>

1. கோவில்பட்டிமேற்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 387, 506(ii)–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கு.வி.மு.ச பிரிவு 173(2)ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி குற்ற இறுதியறிக்கையை பரிசீலனை செய்து 04.10.2019ம் தேதியன்று ஆண்டு பட்டிகை வழக்கு எண். 243/2019 ஆக எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 387, 506(ii)–ன் கீழ் கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரி ஆஜராவதற்காக வழக்கினை 18.12.2019ம் தேதியன்று முதல் வாய்தாவிற்காக ஒத்தி வைக்கப்பட்டது.

3. எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் அவருக்கு கு.வி.மு.ச பிரிவு 207–ன் கீழ் வழக்கு ஆவணங்களின் நகல்கள் வழங்கப்பட்டு, ஆவணங்களை படித்து பார்க்க

போதிய கால அவகாசம் வழங்கப்பட்டது. அதன் பின்னர் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 387, 506(ii)–ன் கீழ் 18.12.2019 அன்று குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி வினவிய போது, எதிரி தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்து வழக்கினை நடத்த விரும்புவதாக கூறினார்.

4. எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்ய அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 சான்றாவணங்கள் வரையும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் சொத்துகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

5. <u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u> –

இவ்வழக்கில் கடந்த 11.06.2019 ம் தேதி மாலை 06.00 மணிக்கு கோவில்பட்டி இனாம்மணியாச்சி கூட்டுறவு வங்கி முன்பு சாட்சி1 நடந்து சென்று கொண்டிருந்தபோது, அங்கு வந்த எதிரி சாட்சி1 யை பார்த்து தேவடியா புண்ட மவனே செலவுக்கு பணம் கொடு என்று கேட்டதற்கு, சாட்சி1 நான் உனக்கு எதற்கு பணம் கொடுக்க வேண்டும் என்று கூறியதால், எதிரி சட்டைக்கு மறைத்து வைத்திருந்த அருவாளை எடுத்து சாட்சி1 ன் கழுத்தில் வைத்து ஒழுங்காக உன் சட்டைப் பையில் இருக்கும் பணத்தை கொடு என்று அச்சுறுத்தியும், இந்த விசயத்தை வெளியில் சொன்னால் உன்னை வெட்டி கொல்லாமடல் விடமாட்டேன் என்று மிரட்டியுள்ளார்.

(1) கடந்த 11.06.2019 ம் தேதி 19.00 மணிக்கு கோவில்பட்டி மேற்கு காவல்நிலைய தலைமைக்காவலர்திரு. பாலசுப்ரமணியன் நிலைய பொறுப்பில் இருந்தபோது கோவில்பட்டி நகரைச் சேர்ந்த சுப்பையா மகன் மகேஸ் என்பவர் கொடுத்த புகார் மனு அ.சா.ஆ.1 ஐ பெற்று புகாரின் தன்மைக்கேற்ப கோவில்பட்டி

மேற்கு காவல் நிலைய குற்ற எண் 243/2019 இதச பிரிவுகள் 294(பி), 387, 506(ii)–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 2 ஐ பதிவு செய்துள்ளார்.

(2) பின்னர் சிறப்பு உதவி ஆய்வாளர் இன்பராஜ் 11.06.2019 ம் தேதி 19.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கணேசன் மற்றும் உதயகுமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் அ.சா.ஆ.4 மற்றும் வரைபடம் அ.சா.ஆ 5 ஐ தயார் செய்தார். பின்னர் சாட்சிகள் மகேஷ், ரமேஷ், கணேசன், உதயக்குமார்,கோவில்பட்டி மேற்கு காவல்நிலைய தலைமைக் காவலர் திரு. பாலசுப்ரமணியன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் சாட்சிகளின் வாக்குமூலம் அடிப்படையிலும் புலன் விசாரணை அடிப்படையிலும் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 387, 506(ii)–ன் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரியிடம் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 313(1) (ஆ)ன் கீழ் விளக்கி வினவிய போது எதிரி தனக்கு எதிரான சாட்சிகளின் சாட்சியங்களை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரிக்கப்படவில்லை.

7. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இந்த வழக்கில் ஆஜரான கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் அசா.1 ரமேஷ் அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளித்திருந்த போதிலும், நீதிமன்ற ஆவணங்கள் அடிப்படையில் எதிரி குற்றவாளி என தீர்ப்பளிக்கலாம் என்று வாதிட்டார்.

8. எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அசா.1 ரமேஷ் அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக மாறி சாட்சிமளித்துள்ளார் எனவும், அரசு தரப்பில் அரசு தரப்பு வழக்கினை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை எனவும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி குற்றவாளி இல்லை என விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

9. <u>**தீர்வுக்குரிய பிரச்சினை**</u>

இவ்வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சினை யாதெனில் எதிரியின் மீதான இதச பிரிவுகள் 294(பி), 387, 506(ii)–ன் கீழான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா?அக்குற்றச்சாட்டுக்களின் பேரில் எதிரி தண்டிக்கப்பட வேண்டியவரா? என்பதேயாகும்.

10. இவ்வழக்கின் சம்பவமானது 11.06.2019 ம் தேதி சுமார் 18.00 மணிக்கு நடைபெற்றுள்ளது. புகார் மனு அ.சா.ஆ.1 ஐ 11.06.2019 தேதி 19.00 மணிக்கு பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆனது பதிவு செய்யப்பட்டுள்ளது.

11. இவ்வழக்கில் அசா.1 ரமேஷ் தனது சாட்சியத்தில் வழக்கு சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளார். மேற்படி சாட்சிகளிடமிருந்து அரசு தரப்பில், இந்திய சாட்சிய சட்டம் 154(1)ன் படி கேள்விகள் கேட்கப்பட்டு, அரசு தரப்பிற்கு சாதகமாக எந்தவிதமான பதில்களும் பெற முடியவில்லை.

12. இவ்வழக்கில் அசா.1 ரமேஷ் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளிக்காத நிலையில், பிற சாட்சிகளை விசாரிப்பதில் அரசு தரப்பு வழக்கிற்கு யாதொரு

பலனும் இல்லையென பிற பட்டியல் சாட்சிகளை அரசு தரப்பில் விட்டொழிக்கப்பட்டு, அ.சா.2 இன்பராஜ், சிறப்பு உதவி ஆய்வாளர் விசாரிக்கப்பட்டார்.

13. அ.சா.2 இன்பராஜ், சிறப்பு உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில் இவ்வழக்கினை விசாரணை அதிகாரி விசாரணை செய்து எதிரிக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்து ஆவணத்தின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளார். மேற்படி சாட்சியின் சாட்சியத்தை ஆராய்ந்து பார்க்கும் போது இவ்வழக்கின் புகார்தாரர் மகேஷ் தற்போது அவர்களது வசிப்பிடத்தில் இல்லை என கிராம நிர்வாக அலுவலர் அவர்களால் சான்று வழங்கப்பட்டு அரசு தரப்பில் மேற்படி சாட்சி நீக்கறவு செய்யப்பட்டுள்ளது. மேலும், புகர்தாரர் மகேஷ் அரசு தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து சாட்சியம் அளிக்காத நிலையில், சம்பவ சாட்சியான அசா.1 ரமேஷ் தனது சாட்சியத்தில் வழக்கு சம்பவம் குறித்து புகார்தாரரின் புகார்மனுவிற்கு ஆதரவாக சாட்சியம் எதுவும் அளிக்காமல் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். இந்நிலையில் உறுதியூட்டம் இல்லாத காவல் அதிகாரியின் சாட்சியத்தையும் ஆவணங்களையும் வைத்து மட்டுமே எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டு விட்டதாக தீர்மானிக்க இயலாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14. எனவே எதிரி தான் புகார்தாரரை அசிங்கமாக பேசி, பணம் கேட்டு மிரட்டி, கொலைமிரட்டல் விடுத்தார் என்பதை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

இறுதியாக, அரசு தரப்பு வழக்கினை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்காத நிலையினை எதிரிக்கு அளித்து எதிரி இதச பிரிவுகள் 294(பி), 387, 506(ii)–ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் சொத்துகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே சொத்து குறித்த உத்தரவு எதுவும் இல்லை.

எதிரியால் CRLMP No. 6334/2019 ல் 21.06.2019 ம் தேதியில் இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் 25.06.2019 ம் தேதி எழுதி கொடுக்கப்பட்ட பிணைமுறிவு பத்திரமும் ரத்து செய்யப்படுகின்றன.

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தப்பட்டு 2026 ஆண்டு ஜுன் மாதம் 25 ம் தேதி அன்று திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒப்பம்)...M. மணி மேகலா/25.06.2026
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
கோவில்பட்டி.

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>

| அ.சா | அரசு தரப்பு சாட்சிகளின் பெயர்கள் | அரசு தரப்பு சாட்சிகளின் விவரம் | முதல் விசாரணை நாள் | குறுக்கு விசாரணை நாள் |
|---|---|---|---|---|
| அ.சா.1 | ரமேஷ் | சம்பவ சாட்சி | 18.02.2026 | 18.02.2026 |
| அ.சா.2 | இன்பராஜ் | சிறப்பு உதவி ஆய்வாளர் | 17.06.2026 | 17.06.2026 |

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>

| அ.சா.ஆ | சான்றுகளின் விவரம் | தேதி |
|---|---|---|

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் மனு | 17.06.2026 |
| அ.சா.ஆ.2 | முதல் தகவல் அறிக்கை | 17.06.2026 |
| அ.சா.ஆ.3 | பார்வைமகஜர் | 17.06.2026 |
| அ.சா.ஆ.4 | மாதிரி வரைபடம் | 17.06.2026 |

அரசு தரப்பு சான்றுப் பொருள் – இல்லை

எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் – இல்லை

நீதிமன்ற சாட்சிகள், சான்றாவணங்கள் – இல்லை

(ஒப்பம்)...M. மணி மேகலா/25.06.2026
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
கோவில்பட்டி.

குறிப்பு –

1. வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.
2. இவ்வழக்கில் எந்த சாட்சியும் விசாரணைக்காக 3 வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. இவ்வழக்கின் தீர்ப்பு முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

Dictated on : 25.06.2026
Transcribed on : 25.06.2026
checked on : 25.06.2026
Signed on : 25.06.2026

Visit **ecourts.gov.in** for updates or download mobile app "**eCourts Services**" from Android or iOS

## CASE-SUMMARY

## C.N.R.No. TNTT07-012304-2019

| Sl. No | Details | Particulars | |
|---|---|---|---|
| 1 | Period of Remand of the Accused | 11.06.2019-25.06.2019 | |
| 2 | Date of Filing of the Final Report | 04.10.2019 | |
| 3 | Date of Questioning of the Accused under section 281 Cr.P.C | 18.12.2018 | |
| 4 | Filing of All Miscellaneous Petitions (Except 317 Cr.P.C) | 437 Cr.P.C Petition Filed on 12.06.2019<br>311 Cr.P.C Petition Filed on 17.06.2026 | |
| 5 | Date of Examination in chief and cross examination of witnesses | Chief | Cross |
| | P.W.1 | 18.02.2026 | 18.02.2026 |
| | P.W.2 | 17.06.2026 | 17.06.2026 |
| 6 | Date of Questioning u/s.313 Cr.P.C | 23.06.2026 | |
| 7 | Details of abscondence of an accused | - | |
| 8 | Grant of Stay by Superior Courts | - | |

(Sd)....M..Manimegala/25.06.2026
Judicial Magistrate No.II,
Kovilpatti.